குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**எஸ்.டி.சி.எண். 395/2020**

வழக்கு சாட்சி எ.சா.1

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06–ம் நாள் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | தொழில் | |
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**நாள் 06.10.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். காவல் ஆய்வாளரை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில், அவருக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்க கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். எனக்கு வந்த அழைப்பாணையில் CSR No. 263/2019 புகார் மனு, விசாரணை அறிக்கை பற்றிய விவரம் விசாரணை முடிவு பற்றிய விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு கொண்டுவர சொல்லி அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது, இது சம்பந்தமாக CSR விவரங்களும் மற்றும் Disposal விவரமும் கொண்டு வந்துள்ளேன். 05.12.2019 CSR No. 263/2019 ல் புகார்தாரர் பாலசந்தர் SBI காசோலை எண். 771448, 771449 செக் புக் வைத்திருந்ததை வைத்துக்கொண்டு, அதையும் தர மறுத்ததாக தமிழ்செல்வன் மீது புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அது சம்பந்தமாக தான் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து இருவரையும் விசாரணை செய்து இருவரிடமும் எழுத்து மூலமாக எழுதி வாங்கி கொண்டோமா என்றால் சரிதான். அந்த இருவரிடமும் இருந்து எழுத்து மூலமாக பெறப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் கேட்டிருந்தும் அதை ஏன் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்றால் காவல் நிலையம் பழைய கட்டிடத்திலிருந்து புதிய கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட காரணத்தினால் ஆவணங்கள் தேடிப்பார்த்தும் கிடைக்கப்பெறவில்லை. தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் CSR நகல், Type of Disposal Online copy என்பதால் அதை நான் தாக்கல் செய்கிறேன். **மேற்படி CSR நகல் மற்றும்**

**வழக்கு முடிக்கப்பட்ட அறிக்கை எ.த.சா.ஆ 1 வரிசை ஆகும்.** நான் தற்போது தாக்கல் செய்துள்ள Type of Disposal Online copyல் Compromise Effected என்ற அடிப்படையில் மனு முடிக்கப்பட்டதாக சொல்லும் நிலையில், எந்த விதத்தில் இருவருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டது என்பது சம்பந்தமான ஆவணம் தற்போது என் வசம் இல்லை என்று சொன்னால் சரிதான். CSRல் சொல்லப்பட்டுள்ள காசோலைகள் தமிழ்செல்வன் வசம் தான் கொடுக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு தான் சமரச உடன்பாடு எட்டப்பட்டது என்று சொன்னால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் CSR Register பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி CSR Register புத்தகத்தில் யார் புகார் கொடுத்தார், யார் மீது புகார் கொடுத்தார், கொடுத்த புகார் எவ்வாறு முடிக்கப்பட்டது, விசாரணை அதிகாரி பற்றிய விவரங்கள் அனைத்தும் மேற்படி CSR Register புத்தகத்தில் பராமரிக்கப்படுமா என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

**(மேற்படி CSR சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் வாக்குமூலத்தை தாக்கல் செய்ய ஒத்திவைக்கப்படுகிறது).**

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**